செய்தி வெளியீடு

செ.வெ.எண்:67 நாள்:30.11.2017

**நீலகிரி மாவட்டம் கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (30.11.2017) தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் அரசு முதன்மைச் செயலர், நிர்வாக இயக்குநர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் திரு.சந்திரகாந்த் பி.காம்ளே,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான துறைரீதியிலான செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.**

நீலகிரி மாவட்டம் கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (30.11.2017) தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் அரசு முதன்மைச் செயலர், நிர்வாக இயக்குநர் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் திரு.சந்திரகாந்த் பி.காம்ளே,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் துறை ரீதியிலான செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் அரசின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்து, நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் செயல்பாட்டிற்கு கொண்டு வரும் படி அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் திரு.அமர்குஷ்வாஹா,இ.ஆ.ப., இன்கோசர்வ் நிர்வாக இயக்குநர் திரு.வினித், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தெ.பாஸ்கரபாண்டியன், மாவட்ட வன அலுவலர் (தெற்கு) திரு.கலாநிதி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.